# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

Calender :
Miscellaneous :
Preliminary Register : STC.225/2022
Sessions :
Deposition of Witness for : PW-1 Village:
Name : இளஞ்செழியன்
Taluk :
Father's/Husband's Name : குப்புசாமி Age : 63
Nationality : Indian Religion :

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 03.05.2024.**

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி ராஜாங்கம் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் அவர் எனது குடும்ப நண்பர் ஆவார். வழக்கு கடனுக்கு முன்பாக நான் எதிரிக்கு கடன் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் கடன் கொடுத்து திரும்ப வாங்கியுள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் மற்றும் மாருதி சிட்பண்ட் நிறுவனத்தில் நிர்வாக பங்குதாரராக இருக்கிறேன். மேற்படி மாருதி சிட்பண்ட் நிறுவனத்தில் எதிரி ஒரு ஏல சீட்டு உறுப்பினர் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தில் எதிரி எந்த சீட்டு குருப்பில் உறுப்பினராக இருந்து வந்தார் என்றால் பல சீட் குருப்புகளில் உறுப்பினராக இருந்து வந்தார். எதிரி மேற்படி சிட்பண்ட் நிறுவனத்தில் ஏல சீட்டு எடுத்துள்ளார் என்றால் சரிதான்.

2. எதிரிக்கு கடன் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ரூ.7,50,000/- தொகை ஒரே தவணையில் கொடுக்கப்பட்டதா அல்லது பல தவணைகளில் கொடுக்கப்பட்டதா என்றால்

ஒரே தவணையில் கொடுக்கப்பட்டது. கடன் கொடுக்கும்போது எந்த தேதியில் எவ்வளவு ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது என்று லட்ஜரில் குறிப்பு எழுதப்படும் என்றால் நான் அவ்வாறு குறிப்பு எதுவும் எழுதவில்லை. எந்த ஒரு நபருக்கும் கடன் கொடுத்தால் அந்த கடனை பொறுத்து வரவு செலவு எழுதி வைக்கப்பட வேண்டும் என்றால் நிறுவன ரீதியாக கடன் கொடுக்கப்பட்டால் அவ்வாறு செய்யப்பட வேண்டும். நான் தனிப்பட்ட முறையில் கடன் கொடுத்ததால் அவ்வாறு செய்யவில்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகைக்கு வரவு செலவு கணக்கு எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய மாத வருமானம் என்னவென்றால் ரூ.10,000/- முதல் ரூ.15,000/- வரை மாத வருமானம் இருக்கும். எனக்கு சேமிப்பு எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. சிட்டி யூனியன் வங்கியில் சேமிப்பு கணக்கு மற்றும் நிரந்தர வைப்பு கணக்குள்ளது. மேற்படி வங்கியில் எவ்வளவு சேமிப்பு தொகை உள்ளது என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை.

3. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் வருமான வரி செலுத்தும் அளவுக்கு எனக்கு வருமானம் இல்லை. சிட்டி யூனியன் வங்கியில் உள்ள எனது சேமிப்பு குறித்த ஆவணங்களை தாக்கல் செய்யலாமா என்றால் நிரந்தர வைப்பீட்டில் இருந்து பணத்தை எடுத்துவிட்டேன். சேமிப்பு கணக்கு மட்டும் உள்ளது. அந்த சேமிப்பு கணக்கில் பாஸ் புத்தகத்தை தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். மேற்படி நிரந்தர வைப்பீடு எதிரிக்கு கடன் கொடுத்த போது இருந்ததா என்றால் அதற்கு முன்பே இருந்தது. ஆனால் அதிலிருந்து எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி என்னவென்றால் 12.05.2020 ஆகும். மேற்படி தேதி கொரோனா பெருந்தொற்று காரணமாக தடுப்பு காலமாக இருந்தது என்றால் சரிதான்.

4. மேற்படி தேதி ஒரு நபர் ஒரு நபரை சந்திப்பதற்கும் தொடர்பு கொள்வதற்கும் தடை செய்யப்பட்ட காலம் என்றால் உண்மைதான். எதிரி எனக்கு கடனுறுதி சீட்டு எந்த

தேதியில் எழுதிக் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் 12.05.2020 ம் தேதி கொடுத்ததாக சொல்லி உள்ளேன். மேற்படி கடனுறுதி சீட்டை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பு.சா.ஆ 1 கடனுறுதி சீட்டை எழுதியது யார் என்றால் நான்தான் எழுதினேன். நானும் கலியமூர்த்தி என்பவரும் சேர்ந்து மாருதி சிட்பண்ட் நிறுவனத்தை நடத்தி வருகிறோம் என்றாலும் அந்த சிட்பண்ட் நிறுவனத்தில் 05.10.2007 ம் தேதி முதல் 03.03.2014 ம் தேதி வரை எதிரி ஏல சீட்டு உறுப்பினராக இருந்து வந்தார் என்றாலும் சரிதான். மேற்படி காலகட்டத்தில் எதிரியிடமிருந்து அவர் எங்கள் சிட்பண்ட் நிறுவனத்தில் ஏலசீட்டு எடுத்தபோது அந்த ஏல சீட்டிற்கு ஜாமினாக இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கடனுறுதி சீட்டு மற்றும் காசோலை பூர்த்தி செய்யப்படாமல் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

5. மேற்படி ஏல சீட்டு தொகையினை பல தேதிகளில் திரும்பி பணம் செலுத்திவிட்டார் என்றால் சரிதான். எங்கள் சிட்பண்ட் நிறுவனத்தில் காலதாமதமாக பணம் செலுத்தினால் அதற்கு தனியாக வட்டி வசூலிப்போம் என்றால் சரியல்ல. எதிரி காலதாமதமாக பணம் செலுத்தியதற்கான வட்டிக்காக வழக்கு காசோலை மற்றும் கடனுறுதி சீட்டு எங்களால் பூர்த்தி செய்யப்பட்டு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 12.05.2020 ம் தேதி எதிரி என்னிடம் ரூ.750000/- கடன் பெறவில்லை என்றாலும் எந்த கடன் பொறுப்பையும் தீர்ப்பதற்காக வழக்கு காசோலை எதிரியால் எனக்கு வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. லாப நோக்கத்திற்காக வழக்கு கடனுறுதி சீட்டு மற்றும் காசோலை பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**